ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ இறுதியின் சுருதி ॥

(சரம ஶ்லோகம்)

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இறுதியின் சுருதி ॥

(சரம ஸ்லோகம்)

## ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய-பொருள்

இயலா நிலையால் மனமிகழ்ந்து⋆
அத்தால் மற்றை நாடாது⋆
முயலா நெறியை முறித்து⋆
நெஞ்சம் வேறங்கம் தேடாது⋆
மலையாது மற்று பற்று அற்று⋆
கலவாது வழிநின்று கலங்காது⋆
அழியாது ஆசிரியன் இயம்பினனே⋆
இகழாது மறையென இவ்வாறு (1)

## மாம்-பொருள்

திருமால் குறையறியா இறையாய்⋆
திருமதுரையில் தாம் இறங்கி⋆
அருளால் அறங்காக்க தூதனாய்⋆
அவனியின் சுமைக்காக இரங்கி⋆
மருளால் மருண்ட பார்த்தன்தேரில்⋆
பாகனாய் மன்னன் தேற்றி⋆
தருவாய் அடிமைக்கு திருமேனியைத்⋆
தாம் என்று தொட்டுக் காட்டி (2)

## ஏகம்-பொருள்

துறை அரு தானும் வேறாய்⋆
ஆறும் பேறும் தாமே ஈந்து⋆
நெறியெல்லாம் பலன் ஒன்றாய்⋆
நம்பரத்தை இனித் தான் சுமந்து⋆
மற்று ஒன்றும் வேண்டாம் என⋆

prapatti.dot com

மகிழும் திருமகள் நாதனையே⋆
மனமே அறிந்தாய் நீ இன்று⋆
ஏகமெனும் ஒரு சொல்லாலே (3)

சரணம்- பொருள்

உனக்கு ஏதுசுமை இனியென⋆
தமக்கு இனியவனான் என்னை⋆
உமக்கு பணி செய்ய திருத்தி⋆
அருளிய அருங் குணங்களையும்⋆
சுடும் கடலில் சுழன்றமிழ்ந்த எம்மை⋆
மீட்டிக் காட்டிய நல் வழியும்⋆
தன்னையே தரும் தனியிறையாய்⋆
வேராய் ஓர் ஆறாகி நின்றாயே (4)

வ்ரஜ-பொருள்

மறத்தால் மறுத்த மறுமைப்
பயனால்⋆ மனம் வெறுத்து⋆
அறத்தால் பிறழாது⋆ அதன்
வழியே நடந்து⋆ உறுதியுடன்
ஒருக்கால் தஞ்சமென⋆ உம்
பொருளை உமக்கே தந்துயர்ந்து⋆
தரத்தால் அடைவிக்கும் அடிகளை⋆
அடைவோமே நாம் உணர்ந்து (5)

அகம்-பொருள்

மறை நானே! அருள் சுரை நானே!
காக்கும் இறையும் நானே!⋆
வானவருடன் மானிடனாய் புவியில்
தோன்றும் சுவை நானே!⋆
அறியாருக்கு அறிவு நிதிநானே!

prapatti.com

கதி நானே! உமக்கு பதி நானே!⋆
நிலை நானே! அறிவாய்⋆ நான்
என்றவனும் திருநாரணன் தானே! (6)

த்வா-பொருள்

அரணிலா அடையெனக் காட்டிய
அடிகளை⋆ உம்மறிவாலே யாம் பற்றி⋆
துணையிலா பெரு நிலையென⋆
தனிமையின் இனிமை போற்றி⋆
மூலத்திலும் முடியோன் முன்னிலும்⋆
முன் அமர்ந்த முழு முதல்வா⋆
உன் சீலமென்ன! சிறியேன் எம்மை⋆
அடைக்கலமாய் ஆக்கி அருளினாயே (7)

ஸர்வ பாபேப்ய:-பொருள்

காணா இருளோ கவரா பொருளோ⋆
தீரா காடோ தணியா சூடோ⋆
தாரா நெஞ்சோ தாங்கா நஞ்சோ⋆
தாளா நரகோ மீளா பிறப்போ⋆
விளங்காது வினையனைத்தும் விலக்கி⋆
வீட்டை காட்டி விடுவிக்கும்⋆
தயங்காது நின்தாளில் அடையும்
சுகமே⋆ என்றும் எமக்கு நிலைக்கும் (8)

மோக்ஷயிஷ்யாமி-பொருள்

தருவாய் வினை விடுத்து⋆
வீடு நான் கேட்கும்போது⋆
விரைவாய் இன்றே இல்லை⋆
நாளையென விரும்பும் போது⋆
அளித்து அழைப்பாய் உயரே⋆

உமக்கே குற்றேவல் செய்ய⋆
களித்து இருப்பார் வந்தார்⋆
அவரோடு சேர்ந்து யானுய்ய (9)

மா சுச:-பொருள்

அமிழ்ந்து ஆழ்கடலில் அறிவில்லா⋆
அடிமை இணையடிகள் அடைய⋆
நெகிழ்ந்து பிறவி வேண்டாவென⋆
பொருந்தி பிரியா உறவுகாட்டி⋆
வினைதிருத்தி தகவால் காத்து⋆
திண்மதியுடன் துய்யநிலை ஏற்றி⋆
எமை வருத்தி வாடும் சோகம்⋆
தவிர்த்து வாழ்விப்பாய் வள்ளலே (10)

பலன்

பக்திக்கு உறுப்பாம் கருமமும்
ஞானமும்⋆ முதலிலவை சொல்லி⋆
சக்தியிலா மாந்தருக்கு உயர்த்தி
ப்ரபத்தியென⋆ மற்ற களை தள்ளி⋆
தீயினில் தூசாய் மாசு நீக்கி⋆
வேண்டும் அன்றே வான் அளிக்கும்⋆
மறை மொழிந்த சீமாதவன்தாளே⋆
சரண் என்றே மனம் களிக்கும் (11)

prapatti.com